"பொங்கலோ பொங்கல்
கூட்டுறவின்
சமத்துவ பொங்கல்"

# கூட்டுறவு

ஜனவரி- 2026

## பொங்கல் திருநாளை சிறப்பிக்கும் தமிழக அரசு
## மக்கள் நலனை முன்னிறுத்தும்
## பொங்கல் பரிசுத் தொகுப்பு 2026







ரூ. 20/-

C.C. BANK

நம்பகமான பாதுகாப்பு
நிலையான வளர்ச்சி

(Since 1930)

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

**215, பிரகாசம் சாலை, (பிராட்வே), சென்னை-600108.**

தொலைபேசி எண் : 044-23458708 to 23458713 பேக்ஸ் :044-25381087

Web : www.ccbankchennai.com Email : ccb_bank@yahoo.co.in

**சென்னை மாநகரில் 71 கிளைகள்**




- மைய வங்கியியல் சேவையுடன் கூடிய கிளைகள்
- ATM மற்றும் SMS வசதி
- RTGS / NEFT பணப் பரிமாற்ற வசதி
- 54 கிளைகள் குளிர்சாதனம் மற்றும் நவீன வசதிகளுடன்
- சுமார் 10,000 வாடிக்கையாளர்களுக்கு நேரடி சமையல் எரிவாயு மானியம்
- ரூ.500 கோடிக்கும் அதிகமான முதலீடு
- வைப்பீடுகளுக்கு கூடுதல் வட்டி
- ஆயுள்/ பொதுக் காப்பீடு சேவைகள்

**அனைத்துத் தரப்பினருக்குமான கடனுதவிகள்**

- வீடு அடமானக் கடன்கள் / வீட்டுவசதி கடன்கள்
- நகைக் கடன்கள் (பல்வேறு வட்டி விகிதங்களில்)
- மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்கள்
- சிறுவணிகக் கடன்
- சம்பளக் கடன்
- சுய உதவிக் குழுக்களுக்கான கடன்

(IFS Code: TNSC0010500)

# கூட்டுறவு

மலர் : 98 | ஜனவரி – 2026 | இதழ் : 10

கூட்டுறவு இயக்கக் கொள்கை விளக்க
இதழ் எல்லார்க்கும் எல்லாமே என்றே ஞாலம்
இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்
ஏற்றிடுவோம் கூட்டுறவு வெற்றிப் பாதை!

ஆசிரியர் :

முனைவர். க.சொ. இரவிச்சந்திரன்,
M.Sc.,(Agri), M.A.,B.L., H.D.C.M., Ph.D.,,

தொலைபேசி : 044–2836 4864

மின்னஞ்சல் : tncupub03@gmail.com

இணையதளம் : www.tncu.tn.gov.in

ஆயுள் சந்தா ரூ. 2000/–
(பத்தாண்டுகளுக்கு)

ஆண்டு சந்தா ரூ.210/–

தனிப்பிரதி விலை ரூ.20/–

## விளம்பரக் கட்டணம்

(GST 5% உட்பட)

பல வண்ணம் (ஓராண்டிற்கு)
அட்டை 4 ஆம் பக்கம் ரூ.50,000/–
அட்டை 2 & 3 ஆம் பக்கம் ரூ.40,000/–

உள்ளே கருப்பு – வெள்ளை
(ஓராண்டிற்கு)
முழுப்பக்கம் ரூ.24,000/–
அரைப்பக்கம் ரூ.12,000/–

உள்ளே கருப்பு – வெள்ளை
(6 மாதங்களுக்கு)
முழுப்பக்கம் ரூ.12,000/–
அரைப்பக்கம் ரூ. 6,000/–

## இந்த இதழில்....


ஆசிரியர் உரை! மாமழை போற்றுதும் கூட்டுறவு போற்றுதும்! — 5

முதல்வர் சிவகங்கையில் கூட்டுறவின் வெற்றி பயணம் குறித்து பெருமிதம்...!” — 12

நம்ம ஊர்..நம்ம கூட்டுறவு: திண்டுக்கல், ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கல்வி, திறன் மற்றும் விழிப்புணர்வை இணைக்கும் வளர்ச்சி மையம்"! — 26

இன்று ஒரு தகவல்: நிழல் மனிதர்கள்!! — 34

மஞ்சள் கூட்டுறவு இயக்கம் காக்கும் பாரம்பரியப் பயிர்!!! — 38



கட்டுப்பாடும், ஒழுங்கும்,
கட்டாயம் நமக்குத் தேவை.
இவை,
சாதாரணமானவைதான்.
ஆனால், இம்மாதிரி
சாதாரண விஷயங்களைக்
கொண்டுதான் ஒரு சமூகத்தை
எடைபோட முடியும்...

- பேரறிஞர் அண்ணா

## அட்டைப்படம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்கள் 8.1.2026 அன்று சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/– ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்த நிகழ்வு.



ஆசிரியர் உரை

# மாமழை போற்றுதும் கூட்டுறவு போற்றுதும்

**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாமநீர் வேலி யுலகிற்கு அவன்அளிபோல்**
**மேல்நின்று தான்சுரத்த லான்.**

– என்று இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் நூலின் மங்கள வாழ்த்துப் பாடலில் மழையின் மகத்துவம் போற்றப்படுகிறது. சோழ மன்னனின் அருள் கடலால் சூழப்பட்ட உலகைக் காக்கும் போல், மழை மேல்நின்று பெய்து மக்களை காப்பது போல, கூட்டுறவும் மக்களின் வாழ்வை காக்கும் அருள் சக்தியாக செயல்படுகிறது. மழை பூமிக்கும் உயிர்களுக்கும் உயிரூட்டுவது போல், கூட்டுறவு மக்களின் வாழ்க்கைக்கு உறுதுணையாக நிற்கிறது.

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.**


உலகிற்கு உயிராக விளங்கும் மழை, இடையறாது பெய்து நிலமும் உயிர்களும் நிலைபெறச் செய்கிறது. அதனால் மழையே உலகிற்கு அமிழ்தம் எனக் கருதப்படுகிறது. அதேபோல், கூட்டுறவும் மக்களுக்கான அமிழ்தமாக செயல்படுகிறது.

வாழ்க்கை மேம்பாட்டிற்கும் வழி வகுக்கும் ஒரு சித்தாந்தமாக விளங்குகிறது. அதனால் தான் கூட்டுறவு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உலகளாவிய இயக்கமாக திகழ்கிறது.

கூட்டுறவு என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு கருவி. உலகத்தின் எல்லா பகுதிகளிலும் பரவி உள்ள ஒரு இயக்கம். எந்த அரசியல் இயக்கமோ, சமூக இயக்கமோ, நிறுவனமோ எதுவும் கூட்டுறவை எதிரியாகப் பார்க்கவில்லை. உலகில் பல இயக்கங்கள் தோன்றியும் மறைந்தும் வருகின்றன. பல இயக்கங்கள் விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும் சந்திக்கின்றன. ஆனால் கூட்டுறவு இயக்கம் மட்டும் அனைவராலும் வரவேற்கப்படுகிறது.

தாயே தாயே தமிழென வந்தாய்
தமிழே தமிழே அருள் மொழி பொழிந்தாய்
அருளே கருணையை தந்தாய்
கருணையே கூட்டுறவாய் நின்றாய்...

என்று சொல்லப்படுவது போல, கருணை, அருள், மனிதநேயம் ஆகியவை ஒன்றிணைந்து கூட்டுறவாக உருவெடுத்திருக்கின்றன. அதற்குக் காரணம் அதன் தத்துவம், கோட்பாடு, மனிதநேயம். கூட்டுறவு என்பது ஏழை எளிய மக்களுக்கு மட்டும் அல்ல; அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கையில் கூட்டுறவு பங்களிக்கிறது. அடிமைத்தனத்தில் சிக்கிய உழைப்பாளிகளுக்கும், அனைத்தையும் இழந்த நிலையில் வாழும் மகளிருக்கும், ஆதரவற்றவர்களுக்கும், கூட்டுறவு ஒரு தாயாக திகழ்கிறது. அன்னை தெரசா தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், குடிசைப் பகுதிகளில் சுகாதாரமற்ற சூழலில் வாழ்ந்தவர்களுக்கும் செய்த உன்னத சேவை போல், கூட்டுறவும் சமூகத்தின் கடைசி மனிதரையும் காக்கும் இயக்கமாக விளங்குகிறது. இத்தகைய உயரிய பணியை வேறு எந்த அமைப்புகளும் இதுவரை செய்யவில்லை; செய்யவும் முடியாது. எனவே, மழையைப் போற்றுவது போலவே, கூட்டுறவையும் நாம் போற்ற வேண்டும். அதை தொடர்ந்து வாழவைத்தல் நம் அனைவரின் கடமை. மாமழை போற்றுதும் – கூட்டுறவு போற்றுதும்!❑



# ரொக்கமாக... நேரடியாக... மக்களிடம்...
# கூட்டுறவுத் துறையின் பெருமைமிகு சாதனை!!!

## பொங்கல் பரிசுத் தொகுப்பு 2.15 கோடி பயனாளர்களுக்கு ரூ.6453.54 கோடி ரொக்கமாக வழங்கி சாதனை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் பெருமிதம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமது சீர்மிகு திட்டங்கள் மக்களை சென்றடையவும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி பாதுகாக்கவும், அயராது சிந்தித்து செயல்படுத்தி வருகிறார்கள். மக்களின் தேவைகளை நன்கு அறிந்து உணர்ந்து, துறைகள் தோறும் பல்வேறு திட்டங்களை வழங்கி, அவற்றின் மூலம் சாதனைகளையும் நிகழ்த்தி வருகிறார்.

மக்களுக்கான சேவைகள், பொருளாதார முன்னேற்றம் மற்றும் வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றில் கூட்டுறவுத்துறை முக்கியமான ஒரு அங்கமாக விளங்குகிறது. தன்னம்பிக்கையை வளர்த்திடவும், மக்களின் பொருளாதார நிலையை உயர்த்திடவும் கூட்டுறவுத்துறை பெரும் பங்காற்றி வருகிறது.






கூட்டுறவுத்துறையின் பல முத்தான திட்டங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டும், ஏற்கனவே உள்ள திட்டங்கள் மேம்படுத்தப்பட்டும், சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை நடைமுறைப்படுத்துவதில், கூட்டுறவுத்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கவனத்துடனும் தொய்வின்றியும் திறம்பட பணியாற்றி வருகின்றார்கள்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் 2026–ஐ மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு, பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுநீள கரும்பு வழங்கப்படும் என அறிவித்தது. மேலும், பொங்கல் திருநாளை இன்னும் சிறப்பாக்கும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு ரொக்கப் பரிசாக ரூ.3,000/– வழங்கப்படும் எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 08.01.2026 அன்று சென்னை, பட்ரோடு நியாயவிலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மேலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை, சிந்தாதரிப்பேட்டை TUCS நியாயவிலைக் கடையிலும், அந்தந்த மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.




தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு, 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய நியாயவிலைக் கடைப் பணியாளர்களால் வழங்கப்பட்டன.

இதில், முதல் நாளில் 200 குடும்ப அட்டைதாரர்களுக்கும், இரண்டாம் நாளில் 300 முதல் 400 வரை உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக டோக்கன்கள் வழங்கப்பட்டன. இப்பணிக்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக, அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. இந்த தைத்திருநாளை ஒரு திருநாளாக மட்டுமல்லாமல், ஒரு திருப்புமுனையாக மாற்றியிருக்கிறது தமிழக அரசு.

தமிழ்நாட்டு மக்கள் சமத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில், ஒற்றுமையுடனும் வேறுபாடின்றியும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் அன்றாட வாழ்வாதாரத்தில் பங்கு பெறும் நோக்கில், குடும்பங்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அரசால் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இக்குடும்ப அட்டைகள் மூலம் அட்டைதாரர்கள் அத்தியாவசிய தொகுப்பு பொருட்களைப் பெறுவதோடு, தங்களின் வாழ்வாதாரத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் உதவுகிறது.

ஏழை மற்றும் எளிய மக்களுக்கான ஒரு உயரிய ஆதாரமாக குடும்ப அட்டைகள் விளங்குகின்றன. இதன் மூலம் அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்கள் மற்றும் நலத்திட்டப் பயன்களை மக்கள் பெற முடிகிறது. அரசாங்கத்திற்கும் மக்களுக்குமான நேரடி தொடர்பை உறுதிப்படுத்தி, மக்களாட்சியின் நிலைத்தன்மையை வெளிப்படுத்துவதிலும் குடும்ப அட்டைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.




ஜனவரி 4ஆம் தேதி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பை அறிவித்ததைத் தொடர்ந்து, ஜனவரி 5–ஆம் தேதி அரசாணை வெளியிடப்பட்டது. வார்த்தை அல்ல, செயல் என்பதற்கான சான்றாக, அந்த அறிவிப்பு மக்களின் வாழ்வில் நம்பிக்கையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு, இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர்களுக்கு ரொக்கமாக தலா ரூ.3,000 வீதம் ரூ.6687.51 கோடியும், ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு நீளக் கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு ரூ.248.66 கோடியும் மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.668.12 கோடி செலவில் வேட்டி, சேலை என மொத்தம் ரூ.7,604.29 கோடி செலவில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது. எண்கள் பெரிதாக இருந்தாலும், அதைவிட பெரிதாக இருந்தது மக்களின் மகிழ்ச்சி!

கரும்பு விவசாயிகளிடமிருந்து தரம் பரிசோதித்து கொள்முதல் செய்வதில் இத்துறை பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் செயல்பட்டனர். உழைப்பின் பலன் உழைப்பாளருக்கே என்பதற்கான சான்றாக இந்த நடவடிக்கை அமைந்தது.

இந்த டிஜிட்டல் மயமான காலகட்டத்தில், அனைவருக்கும் பொங்கல் பரிசுத் தொகையை ரொக்கமாக வழங்கிட கூட்டுறவுத் துறையின் சிறப்பான திட்டமிடல், தொய்வில்லா செயல்பாடு மற்றும் விரைவு பணியாற்றல் காரணமாக, மிகக் குறுகிய காலத்தில் தொகுப்பு வழங்கி முடிக்கப்பட்டது. பிற தேசிய வங்கிகள் செய்ய முடியாத இப்பணியை, கூட்டுறவு வங்கிகள் திறம்பட செய்து சாதித்துள்ளன. இந்தியாவில் எந்த வங்கியும் இதுவரை செய்ய முடியாத ஒரு சாதனையை, தமிழக கூட்டுறவுத் துறை செய்து முடித்துள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தொடங்கும் இந்தப் பொறுப்பு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் வழியாக முறையாக வழிநடத்தப்பட்டு, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியில் பாதுகாக்கப்படுகிறது. அங்கிருந்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வேகமாக பயணம் செய்து, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் வழியாக அலுவலகங்களிலிருந்து மக்களை நோக்கி சென்றடைந்து, இறுதியில் கூட்டுறவு பணியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் கைகளில் நிறைவு பெறுகிறது. ரொக்கமாக... நேரடியாக ஒரு நொடியும் தாமதமின்றி... பொதுமக்களின் கைகளில்! இது சாதாரண விநியோகம் அல்ல. இது கூட்டுறவுத் துறை அதிகாரிகளின் திட்டமிடல், ஊழியர்களின் இரவு–பகல் உழைப்பு, மொத்த கூட்டுறவு துறையின் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடு. இந்தியாவில் இதுவரை யாரும் செய்யாத ஒரு வரலாற்றுச் சாதனை இதுவாகும்.

சவால்கள் இருந்தன... காலம் குறைந்தது... ஆனால் மக்களின் மகிழ்ச்சியே அனைத்திற்கும் மேலானதாக இருந்தது. அதுவே மாண்புமிகு முதல்வரின் மன மகிழ்ச்சியாகவும் அமைந்தது.

இத்துறை அதிகாரிகளும் பணியாளர்களும், உரிய பணிகளை இரவு பகலாக சிரமேற்கொண்டு, தங்கு தடைகளின்றி, மக்களின் நன்மையை கருத்தில் கொண்டு, அவர்களின் மன மகிழ்ச்சியை முன்னிறுத்தி செயல்பட்டனர். 2026ஆம் ஆண்டிற்கான பொங்கல் தொகுப்பு ஜனவரி 4ஆம் தேதி அறிவிக்கப்பட்டதிலிருந்து, ஜனவரி 8ஆம் நாளுக்குள் மிகக் குறுகிய காலத்தில் பணிகளை செவ்வனே நிறைவேற்றியமை பாராட்டத்தக்கதாகும்.

மேலும், இந்தியாவிலேயே 2.15 கோடி பயனாளர்களுக்கு ரூ.6,453.54 கோடியை ரொக்கமாக, குறுகிய நாட்களுக்குள் 97% அளவில் வழங்கிய பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசையே சாரும். இப்பெருமைக்கும் சாதனைக்கும் அயராது பணியாற்றிய இத்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் மகிழ்ச்சி பகிர்ந்து கொள்வதோடு, அவர்களுக்கு மீண்டும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஏழை–எளியோரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், குறிப்பாக கூட்டுறவுத் துறையின் வாயிலாக அடித்தட்டு மக்களுக்கு விவசாயம் சார்ந்து உறுதுணையாக செயல்படும் வகையில், ஆக்கமும் ஊக்கமும் அளித்து இத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்டவர் ஆவார்.

இத்துறையின் சேவைகள் மற்றும் திட்டங்கள் மென்மேலும் வளர்ச்சி நோக்கி தொடர்ந்து பயணிக்கும் என மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்கள்❑.

# மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைமையில் சிவகங்கையில் ரூ.2,778 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்கள் துவக்கம்

# சிவகங்கையில் கூட்டுறவின் வெற்றி பயணம் குறித்து முதல்வர் பெருமிதம்...




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.01.2026 மற்றும் 31.01.2026 ஆகிய நாட்களில் சிவகங்கை மாவட்டத்தில் கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சி பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதன் தொடர்ச்சியாக, 31.01.2026 அன்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, செட்டிநாட்டில் 330 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூ.61.79 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய கட்டடங்களை திறந்து வைத்தார். மேலும் அங்கு

அமைக்கப்பட்ட அரங்கிற்கு பாரத ரத்னா விருது பெற்ற சி.சுப்பிரமணியம் அவர்களின் பெயரில் "சி. சுப்பிரமணியம் பல்நோக்கு அரங்கம்" என பெயரிட்டு திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ரூ.2,560 கோடி மதிப்பிலான 49 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்ததுடன், ரூ.13.36 கோடி மதிப்பிலான 28 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் ரூ.205 கோடி மதிப்பில் 15,453 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

விழாவில் பேசிய முதலமைச்சர், சிவகங்கை மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்டங்களை விரிவாக எடுத்துரைத்தார். கூட்டுறவுத்துறை மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.855 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் மூலம் 12 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளதாகவும், கடந்த நான்கு ஆண்டுகளில் 50 ஆயிரம் பேருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும் 24,969 விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதனுடன், விடிவெள்ளி சுயஉதவிக் குழுவிற்கு ரூ.35 இலட்சம் மதிப்பிலான காசோலையையும் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன், மாண்புமிகு வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி, வேளாண்மை, உழவர் நலத்துறை செயலாளர் திரு வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா. பொற்கொடி, இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் (பொ) முனைவர் கா. சுப்ரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.❑

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.2450 தொரப்பாடி நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- ✦ மக்கள் சேவையில் 59 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் செயல்படுகிறது.
- ✦ சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.20.81 கோடி உள்ளது.
- ✦ நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.25% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

### குறைந்த வட்டி நிறைவான சேவை

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- ✦ முழுமையான கணிணி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.15.56 கோடி
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.17.00 கோடி

**5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்க் கடன்கள், மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் கடன் அளிக்கப்படுகிறது.

திரு.R.M..தாமோதரன், D.Coop
செயலாளர்

திருமதி. அ.இந்துஜா
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்



கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.3858 வேலூர் மாவட்ட அரசு ஊழியர்கள் கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- ✦ அங்கத்தினர்கள் சேவையில் 106 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி பாதையில் செயல்படுகிறது.
- ✦ சங்க நடைமுறை மூலதனம் ரூ.2596.80 கோடி உள்ளது.
- ✦ நிரந்தர வைப்பிற்குப் 8.25% வட்டி வழங்கப்படுகிறது.

### குறைந்த வட்டி நிறைவான சேவை!

- ✦ அங்கத்தினர்களுக்கு ரூ.20,00,000/– வரை குறைவான வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.
- ✦ முழுமையான கணிணி வசதி செய்யப்பட்டுள்ளது.
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.17.91 கோடி உள்ளது.
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.4583.39 கோடி உள்ளது.

**11% வட்டியில் (90 பைசா) மத்தியக் கால கடன் ரூ.20,00,000/– வரை**

அங்கத்தினர்களுக்கு மத்தியக் காலக் கடனாகக் கடன் மனு அளித்த உடனே குறைவான வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. சங்கம் தங்களது அங்கத்தினர்களுக்குச் சொந்த நிதியிலிருந்து கடன் வழங்கப்படுகிறது. சங்கமானது 106 வருடங்களாகச் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இச்சங்கம் 100–வது ஆண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. உறுப்பினர்களுக்கு 14% பங்கு ஈவுத்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

திருமதி.T. காமாட்சி
செயலாளர்

திரு. M. சாணக்கியன்
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# ஆர்.கே.10. விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., விருதுநகர்

# 104/1, மதுரை ரோடு, அஞ்சல் பெட்டி எண் : 8, விருதுநகர்

தொலைபேசி எண்: (04562) 245815

Website : www.vrdccbank.in Email : virudhunagardccb@gmail.com

| வ. எண் | இட்டுவைப்பு காலம் | மூத்த குடிமக்கள் அல்லாத வாடிக்கை யாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டிவிகிதம் |
|---|---|---|---|
| 1. | 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 2. | 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 3. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 4. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.60% | 5.60% |
| 5. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 6.50% |
| 6. | ஒரு வருடம் முதல் 3 வருடங்கள் வரை | 7.50% | 8.00% |
| 7. | 3 வருடத்திற்கு மேல் | 7.30% | 7.80% |

- வைப்புகளுக்கு கூடுதல் வட்டி
- NEFT & RTGS வசதி
- ATM மற்றும் POS வசதி
- Mobile Banking வசதி
- INSTA CARD வசதி
- Micro ATM வசதி
- MSME கடன்
- சம்பளக்கடன்
- Bank of Wheels வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- தனி நபர் நகைக்காசுக் கடன்
- வீட்டு வசதி மற்றும் வீடு அடமானக்கடன்
- சிறு வணிகக்கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- முதலீட்டுக் கடன்கள்
- சுய உதவிக் குழுக்கடன்கள்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- UPI, IMPS, Phonepay, Gpay, Paytm. Whatsapp pay வசதி

ப்பி.இராஜலட்சுமி
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

# குடியரசு தின விழாவில்
# கூட்டுறவுத் துறையினருக்கு பாராட்டு மற்றும் விருது




திண்டுக்கல், மாவட்ட விளையாட்டரங்கில் 26.01.2026 அன்று 77வது குடியரசு தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. சரவணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவுத் துறை சார்பில் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டமைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக, தாயுமானவர் திட்டம் –முதியவர்கள்/ மாற்றுத் திறனாளிகளுக்கு இல்லம் தேடி குடிமைப் பொருட்கள் வழங்குதல், பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்குதல், மாவட்ட நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசிய குடிமைப் பொருட்கள் நகர்வுப் பணியை சிறப்பாக மேற்கொண்டு பொதுவிநியோகத் திட்டத்தை திறம்பட செயல்படுத்தியது, கூட்டுறவு சங்கங்களில் கணினிமயமாக்கல் பணிகளை முன்னெடுத்தது, உறுப்பினர் சேர்க்கை மற்றும் கடன் வழங்கலை அதிகரித்தது, கூட்டுறவு சங்கங்கள் மூலம் முதல்வர் மருந்தகங்களை திறம்பட செயல்படுத்தியது போன்ற பணிகளுக்காக கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு. ஜிட்டி. ஸ்ரீ ராகவ்பாலாஜி, துணைப்பதிவாளர்/ பணியாளர் அலுவலர் திருமதி பி. உஷாநந்தினி, துணைப்பதிவாளர் (பழனி சரகம்) திரு. செந்தில்வேல் பாண்டியன், கூட்டுறவு சார்பதிவாளர்/கள அலுவலர் (தொப்பம்பட்டி வட்டாரம்) திரு. ரா. மூவேந்தன், இணைப்பதிவாளர் அலுவலக முதுநிலை ஆய்வாளர் திரு. விக்னேஷ் ஆகியோருக்கு விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.❑



திரு.சொ.சீனிவாசன், கூடுதல் பதிவாளர் (விற்பனை, திட்டம் மற்றும் வளர்ச்சி) அவர்கள் 28.01.2026 அன்று திண்டுக்கல் கூட்டுறவு விற்பனைச் சங்கம், ஒட்டன்சத்திரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், வத்தலக்குண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய இடங்களில், உற்பத்தி, சந்தைப்படுத்துதல், குடோன் வருமானம், செலவு மேலாண்மை ஆகியவற்றை பற்றி ஆய்வு செய்தார். இந்நிகழ்வில், திண்டுக்கல் மாவட்ட துணைப்பதிவாளர் திரு. மு. கார்த்திக் கௌதம், பொதுவிநியோகத்திட்டத் துணைப்பதிவாளர் திரு.சு. பா.கார்த்திகேயன், திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலை துணைப்பதிவாளர் திரு.கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.


கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.2460 கண்டிப்பேடு நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- மக்கள் சேவையில் 71 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் செயல்படுகிறது.
- சங்கம் பங்கு மூலதனம் ரூ.62.92 இலட்சம் நிலுவை உள்ளது.
- நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.25% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

குறைந்த வட்டி நிறைவான சேவை

5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/- வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- முழுமையான கணினி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.10.57 கோடி நிலுவை உள்ளது.
- மொத்தக் கடன்கள் ரூ.19.33 கோடி நிலுவை உள்ளது.

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது.

நிரந்தர வைப்பின் பேரில் கடன் வழங்கப்படுகிறது.

திரு.S.K. விஜயகுமாரன்
செயலாளர்

திரு. ஜெ.ரகு
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சரகம் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள இ.இ.153 சாத்தான்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் *சமத்துவ கூட்டுறவு பொங்கல் விழா மற்றும் உறுப்பினர் கல்வி திட்டம்* நடைபெற்றது. சாத்தான்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்களுக்கு அனைவருக்கும் சமத்துவ பொங்கலிட்டு பகிர்ந்தளித்தனர். இவ்விழாவின் உரியடி போட்டி, பலூன் உதவுதல், கயிறு இழுத்தல்,போட்டி மற்றும் இசை நாற்காலி போட்டிகள் நடத்தப்பட்டது.

இப்போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திருச்செந்தூர் சரக துணைப்பதிவாளர் திருமதி குமாரி கிரிஜா தலைமைவகித்தார். மேலும் துணைப் பதிவாளர் பயிற்சி திரு. ஆகாஷ், சாத்தான்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாட்சியர் திரு வளன் மிக்கேல் தளபதி, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய செயலாட்சியர் திரு அ.சாம்டேனியல் ராஜ்,செயலாளர்கள் திரு.எட்வின் தேவாசிர்வாதம்,திரு அருள்தாஸ் மற்றும் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சிந்தனை வலுவானால் செயல் வெற்றியடையும்!!**

கூட்டுறவே! நாட்டுயர்வு !

சேமிப்பீர் ! பயன்பெறுவீர்!

# செங்கல்பட்டு கூட்டுறவு நகர வங்கி லிமிடெட் எண்.375

1,ராஜாஜி தெரு செங்கல்பட்டு

✦ மக்கள் சேவையில் 115 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 3 கிளைகளுடன் செயல்படும் வங்கி

✦ வங்கி நடைமுறை மூலதனம் ரூ. 116.56 கோடி வங்கி சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.

✦ நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படுகிறது.

## குறைந்த வட்டி நிறைவான சேவை

5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- அனைத்து இட்டு வைப்புகளுக்கும் DICGC மும்பை இன்சூரன்ஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- அனைத்துக் கிளைகளும் முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புகள் ரூ.110.14 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ. 87.00 கோடி

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.L. கலையரசி B.Com.
பொதுமேலாளர்

திரு.பெ.வேணுகோபால்.. M.Sc., DCA., H.D.C.M.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## G 3414 காயரம்பேடு நகர கூட்டுறவுக் கடன் சங்கம் லிட்.,

- ✦ மக்கள் சேவையில் 54 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.
- ✦ சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.96.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- ✦ நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 7.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 7.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- ✦ வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- ✦ முழுமையான கணிணி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.53.69 கோடி
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.62.01 கோடி

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்க் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.ஏ,ஜெயஸ்ரீ, D.Coop.,
செயலாளர்

திரு.சுரீன் விஜய், H.D.C.M.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்



கூட்டுறவே! நாட்டுயர்வு!

## இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

தபால் பெட்டி எண்.25, 265, E, வண்டிக்கார தெரு. இராமநாதபுரம்-623501.
✆ : 04567-221245 rdccbank@gmail.com www.rdccbankco.in

**தலைமையகம் உட்பட மாவட்டம் முழுவதும் 32 கிளைகளுடன் வாடிக்கையாளர் சேவையில் 104வது ஆண்டில் செயல்பட்டு வருகிறது.**

**இட்டு வைப்புகளுக்கான வட்டி விகிதம்**

| வ. எண். | விபரம் | சாதாரண மக்களுக்கு | மூத்த குடிமக்கள் |
|---|---|---|---|
| 1. | 31 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 5.50% | 5.50% |
| 2. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.85% | 5.85% |
| 3. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.30% | 6.30% |
| 4. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.85% | 6.85% |
| 5. | 1 வருடத்திற்கு | 8.00% | 8.25% |
| 6. | மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு வருடத்திற்கு | 8.25% | 8.50% |

நிறுவனங்கள் / கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெறப்படும் பெரு இட்டு வைப்புகளுக்கு (Bulk Deposit) 1 வருடத்திற்கு ரூ. 5.00 கோடி மற்றும் அதற்கு மேல் 8.50% வட்டி வழங்கப்படுகிறது.

**கடன் வசதிகள்**

❁ குறைந்த வட்டியில் தனி நபர் நகைக்கடன் ❁ மகளிர் சுயஉதவிக்குழுக்கடன் ❁ மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன் ❁ நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய முத்ரா கடன் ❁ ஆதரவற்ற விதவைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் ❁ வீடு கட்டும் மற்றும் வீட்டு அடமானக் கடன் (குறைந்த வட்டியில்) ❁ சிறுவணிகக்கடன், பணிபுரியும் மகளிர் கடன்

**வங்கிச் சேவைகள்**

❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ விரைவு பண பரிவர்த்தனை சேவை (NEFT & RTGS) ❁ ATM மற்றும் நடமாடும் ATM வசதி ❁ Mobile Banking ❁ விவசாயிகளுக்கு KCC Rupay Card, POS மற்றும் Micro ATM மூலம் பணம் பட்டுவாடா வசதி ❁ LPG Gas சமையல் எரிவாயு மானியம் பெறும் வசதி ❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ G Pay, Phone Pay, PayTM, UPI, IMPS, AEPS

**பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜனா (PMJBY) காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது**

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## ஜி 1686 சிங்கபெருமாள்கோயில் நகர கூட்டுறவு கடன் சங்கம்

- மக்கள் சேவையில் 68 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.
- சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.66.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படகிறது.

### குறைந்த வட்டி நிறைவான சேவை

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.95.64 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ.89.95 கோடி

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்க் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.க.செண்பகவள்ளி, B.Com,M.B.A. D.Coop., செயலாளர்

திரு.சுரீன் விஜய், H.D.C.M., கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.2565 பொய்கை நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- மக்கள் சேவையில் 55 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் செயல்படுகிறது.
- சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.21.27 கோடி உள்ளது.
- நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.25% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

### குறைந்த வட்டி நிறைவான சேவை

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.14.40 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ.22.79 கோடி

**5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்க் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 8.25% கடன் அளிக்கப்படுகிறது.

திரு.N.செந்தில்குமார் செயலாளர்

திரு. M. சாணக்கியன் கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

சேமிக்க சிறந்த வங்கி !

100 ஆண்டு பாரம்பரியமிக்க வங்கி !!

# புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

## புதுக்கோட்டை

SINCE 1920

அன்புடையீர் !

புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் 28 கிளைகளுடன் 104 ஆண்டுகளை கடந்து மக்கள் சேவை புரிந்து வருகிறது.

### எங்களது சிறப்பம்சங்கள்:-

★ மைய வங்கியியல் சேவை ★ UPI சேவை. ★ துரித பணப்பரிமாற்ற சேவை (RTGS/NEFT/IMPS)
★ ATM சேவை (ATM Debit Card / KCC Card) ★ குறுந்தகவல் சேவை (SMS)
★ செல்லிடை வங்கிச் சேவை (Mobile Banking) ★ தனிநபர் பாதுகாப்பு பெட்டக (Locker) வசதி
★ அரசின் அனைத்து மானியங்களும் பெறும் இணையதள வசதி.
★ அடமான நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி

### விரைவு நகைக்கடன் சேவை

கிராம் ஒன்றுக்கு ரூ.5,000/-

- ஒரு நபருக்கு 30.00 இலட்சம் வரை மிகக்குறைந்த வட்டி விகிதம்.
- மிகக்குறைந்த நகை பரிசீலனை கட்டணம்.
- கூட்டு வட்டி கிடையாது.
- அனைத்து வேலைநாட்களிலும் நகைக்கடன் வழங்கப்படுகிறது.
- தங்க நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி.



### மிகக்குறைந்த சாதாரண வட்டியில் கடன்பெற

வீட்டு அடமான கடன் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரை



புதிய வீடு கட்ட குறைந்த வட்டியில் ரூ.75.00 இலட்சம் வரை

எந்தவித மறைமுக கட்டணம் இல்லை...
கடன் சலுகை சாதாரண வட்டி.

தவணைக்காலம் 50 வாரங்கள்

சிறு வணிகக் கடன் உயர்ந்தபட்சமாக கடன் தொகை ரூ.1,00,000 வரை

தகுதியுடையவர்கள் : பூ கடை, பழக்கடை, காய்கறி கடை, பெட்டிக்கடை, மளிகைக்கடை, மீன்கடை, துணி வியாபாரம்.

### கடன் சேவைகள்

- நகைக்கடன் • தனிநபர் சிறு வணிகக்கடன்
- சுய உதவிக்குழு கடன் • டாம்கோ கடன்
- டாப்செட்கோ கடன் • மாற்றுத்திறனாளிகள் கடன்
- தனிநபர் சம்பள கடன் • மகளிர் தொழில் முனைவோர் கடன்
- பணிபுரியும் மகளிர் கடன் • பண்ணை சாரா கடன்
- வீடு கட்டும் கடன் • வீட்டு அடமானக் கடன்
- கைம்பெண்கள் (ம) கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- வேளாண் (ம) ஊரக வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு 0% வட்டியில் பயிர்க்கடன் மற்றும் குறைந்த வட்டியில் மத்திய கால கடன்கள்.

### நிரந்தர வைப்புக்கு வட்டி விகிதம்

| காலம் | பொது | மூத்த குடிமக்கள் |
|---|---|---|
| 7 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 7.00% |
| 1 வருடம் முதல் 3 வருடம் வரை | 8.00% | 8.25% |
| 3 வருடத்திற்கு மேல் | 8.00% | 8.25% |

### சிறப்பு திட்டங்கள்

- பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)
- பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY)
- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY)

### வணிக வங்கிகளுக்கு இணையான டிஜிட்டல் வசதிகள் கொண்ட வங்கி

UPI PAYMENTS

G Pay, PhonePe, Paytm, UPI, BHIM

NEFT & RTGS

Mobile Banking → IMPS

MICRO ATM

வங்கியின் சேவைகள் ! உங்கள் கையில் !!

வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் சேவையை பயன்படுத்தி கொள்ளவும்.

வங்கியில் முதலீடு செய்துள்ள வைப்புகளுக்கு DICGC நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் நேசமிகு துரித சேவையே வங்கியின் நோக்கம்

இன்றே அணுகுவீர்! வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 27 கிளைகள்

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர்! பயன்பெறுவீர்!

## ஜி 2193 தென்மேல்பாக்கம் நகர கூட்டுறவு கடன் சங்கம்

- ✦ மக்கள் சேவையில் 54 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.
- ✦ சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.102.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- ✦ நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/- வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- ✦ வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- ✦ முழுமையான கணிணி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.46,93 கோடி
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.60.19 கோடி

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.S.வாணி, B.Com., D.Coop.,
செயலாளர்

திரு. ஆ.வேலு, B.B.A., H.D.C.M.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

---

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.2529 காட்பாடி நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- ✦ மக்கள் சேவையில் 56 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் செயல்படுகிறது.
- ✦ சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.21.65 கோடி உள்ளது.
- ✦ நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.25% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/- வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- ✦ வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- ✦ முழுமையான கணிணி வசதி
- ✦ மொத்த வைப்புகள் ரூ.16.23 கோடி
- ✦ மொத்த கடன்கள் ரூ.23.29 கோடி

**5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 8.5% கடன் அளிக்கப்படுகிறது.

திரு.S.பாபு, D.Coop.,
செயலாளர்

திரு. J. ரகு
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்


துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (வரை) நெ. K.1550
THE TUDIYALUR CO-OPERATIVE AGRICULTURAL SERVICES LTD., No.K.1550
மேட்டுப்பாளையம் ரோடு, துடியலூர், கோயமுத்தூர் – 641 034.
TUCAS
Since 1955
வேளாண் சேவையில் டியூகாஸ் நிறுவனத்தின் தரமான தயாரிப்புகள்
எண்ணெய் எடுக்காத வேப்பம் பவுடர்
நுண்ணூட்டச்சத்து உரங்கள்
TUCAS
ASOKA BRAND
சமச்சீர் உரங்கள்
கோவை விதைகள்
பெட்ரோல் பங்க்
T.N.P. BUILDINGS
நாற்றுப்பண்ணை
வங்கிப்பிரிவு
பூச்சிக்கொல்லி மருந்துகள்
வேளாண் கருவிகள்
அச்சகப் பிரிவு
வேளாண் சேவையில்
70
1955-2025
ஆண்டுகள்
www.tucascbe.com E-mail: tucas.ao@gmail.com
Mobile : 94878 79721, 94899 75870

## சிரிப்பதற்கு மட்டும்....



அது ஒரு மனநல மருத்துவமனை.... அங்கே அழகன் என்ற பெயருடைய ஒருவர் சிகிச்சைப் பெற்று வந்தார்.

ஒருநாள் ஒரு சக மனநோயாளி கிணற்றில் குதித்து விட்டதால், தன் உயிரைத் துச்சமென நினைத்துக் கிணற்றில் குதித்து அந்த நோயாளியைக் காப்பாற்றி விட்டார் அழகன்.

அதைக் கேள்விப்பட்ட மருத்துவர் அழகனை அழைத்து, "உனக்கு ஒரு நல்ல செய்தியும், ஒரு துக்கமான செய்தியும் சொல்லப் போகிறேன்" என்றார்.

உடனே அழகன், "சொல்லுங்க டாக்டர்" என்றான்.



"நீ உனது நண்பனைக் காப்பாற்றியதால் நீ சுகமடைந்து விட்டாய் என்று நினைக்கிறேன். நீ வீட்டுக்குப் போகலாம். இது நல்ல செய்தி" என்றார்.

பிறகு, "துக்கமான செய்தி: நீ கிணற்றில் குதித்துக் காப்பாற்றிய உன் நண்பன் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டான்" என்று டாக்டர் சொல்லி முடித்ததும் அழகன் ஆர்வமுடன் சொன்னான்,

"டாக்டர்.... அவன் சாகவில்லை. கிணற்றில் விழுந்து நனைந்தவனை ஈரம் காயட்டும் என்று நான் தான் அவனது கழுத்தில் கயிற்றைக்கட்டி மரத்தில் தொங்கவிட்டு இருக்கிறேன். ஈரம் காய்ந்ததும் அவன் சுகமாகி விடுவான்" என்றான். டாக்டர் தலையில் கை வைத்துக்கொண்டு அமர்ந்து விட்டார்.


அமோக விளைச்சலை அள்ளித்தருமே!

**கிரிப்கோ குருணை யூரியா**

UREA | BIO-FERTILISER | SEED




**கிரிஷக் பாரதி கோவாப்பரேட்டிவ் லிமிடெட்.,**

KRIBHCO
Cooperative and beyond...

அறை எண். 1, 2 & 3, ஆயத்த ஆடை வளாகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

நம்ம ஊர் ... நம்ம கூட்டுறவு

# திண்டுக்கல்.... ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## கல்வி, திறன் மற்றும் விழிப்புணர்வை இணைக்கும் வளர்ச்சி மையம்



தமிழ்நாட்டின் திண்டுக்கல் மாவட்டம் பகுதியில் அமைந்துள்ள ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தரமான உயர்கல்வியை வழங்கும் வளர்ச்சி வாய்ப்புள்ள கல்வி நிறுவனமாக விளங்குகிறது. இது தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஒர் அங்கமாக விளங்குகிறது. மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் இணைப்பில் செயல்படும் இக்கல்லூரி, கல்வித் திறன் மேம்பாட்டையும் கூட்டுறவு கல்வி வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

இக்கல்லூரி தற்காலிகமாக ஜெய்னி ஹெல்த் அண்ட் எஜுகேஷனல் சாரிடபிள் டிரஸ்ட் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. கல்வி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ரூ.75.75 கோடி மதிப்பில் கல்லூரிக்கான புதிய தனித்த கட்டிடம் கட்டப்பட்டது. இக்கட்டிடத்தை 07.01.2026 அன்று திண்டுக்கலில் நடைபெற்ற அரசு விழாவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தது முக்கியமான மைல்கல்லாக அமைந்தது. இந்த முயற்சி,




கூட்டுறவு கல்வித் துறையை வலுப்படுத்துவதற்கும் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் அரசின் உறுதியை வெளிப்படுத்துகிறது.

இக்கல்லூரியில் கலை, வணிகம், அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இளநிலைப் பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பாடத்திட்டங்கள் மாணவர்களின் கல்வி விருப்பங்களை பூர்த்தி செய்வதோடு, தொழில்துறை தேவைகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

## கல்லூரியில் வழங்கப்படும் இளநிலைப் பட்டப்படிப்புகள்

- பி.ஏ. (வரலாறு)
- பி.ஏ. ( கூட்டுறவு)
- பி.ஏ. (பொருளாதாரம்)
- பி.ஏ. (ஆங்கிலம்)
- பி.ஏ. (தமிழ்)
- பி.காம்
- பி.காம். (கணினி பயன்பாடுகள்)
- பி.பி.ஏ. (வணிக மேலாண்மை)
- பி.எஸ்.சி., (இயற்பியல்)
- பி.எஸ்.சி., (வேதியியல்))
- பி.எஸ்.சி., (விலங்கியல்)
- பி.எஸ்.சி., (கணினி அறிவியல்)
- பி.எஸ்.சி.,(தகவல் தொழிற்நுட்பம்)
- பி.சி.ஏ, (கணினி பயன்பாடுகள்)

## திறந்தவெளி கலையரங்கம்



## கருத்தரங்கு கூடம்



கல்வி வழங்குவதுடன் மாணவர்களின் தனித்திறன் வளர்ச்சிக்கும் இக்கல்லூரி முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாணவர்களிடையே வாசிப்பு பண்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கத்திலும் நூலக வளங்கள் குறித்து விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்திலும், "வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் நூலக வளங்களை சிறப்பாக பயன்படுத்துதல்" என்ற தலைப்பில் மாணவர்களுக்கான ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி, மாணவர்களிடையே அறிவு தேடலையும் சுயக் கற்றலையும் ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது.


வகுப்பறை


கல்லூரி வளாகம்

## கல்லூரி முழுவதும் கண்காணிப்பு வசதி...



மேலும், கல்லூரியில் தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு 27.02.2025 அன்று இரசாயனவியல் துறை மாணவர்களுக்காக "அறிவியலின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி, அறிவியல் துறையின் அவசியத்தையும், அதன் சமூக மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் உள்ள பங்கையும் மாணவர்களுக்கு விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தியது.

கூட்டுறவு கல்வியை அடிப்படையாகக் கொண்டு பல்துறை பாடத்திட்டங்களுடன் செயல்படும் இக்கல்லூரி, மாணவர்களின் கல்வி மற்றும் தொழில்முனைவு வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருகிறது. மதுரை காமராஜர் பல்கலைக்கழக இணைப்பு மூலம் உயர்ந்த கல்வித் தரம் பேணப்படுவதுடன், புதிய கட்டமைப்பு வசதிகள் மாணவர்களுக்கு சிறந்த கல்வி சூழலை வழங்குகின்றன.

புதிய பாடத்திட்டங்கள் மற்றும் கட்டமைப்பு மேம்பாடுகளுடன் வளர்ச்சி பாதையில் முன்னேறும் இக்கல்லூரி, திண்டுக்கல் மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் உயர்கல்வி வளர்ச்சிக்கான முக்கிய மையமாக உருவெடுத்து வருகிறது. கலை, வாணிபம் மற்றும் அறிவியல் துறைகளில் தரமான கல்வியை நாடும் மாணவர்களுக்கு, ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சிறந்த கல்வித் தேர்வாக திகழ்கிறது.❑

*கூட்டுறவே! நாட்டுயர்வு !* *சேமிப்பீர் ! பயன்பெறுவீர்!*

# தாம்பரம் கூட்டுறவு நகர வங்கி லிமிடெட் J.J.46

14, வெங்கடேசன் தெரு, மேற்கு தாம்பரம்,
சென்னை–600 045. ☎.22266583

- மக்கள் சேவையில் 71 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 2 கிளைகளுடன் செயல்படும் வங்கி
- வங்கி நடைமுறை மூலதனம் ரூ.66 கோடி வங்கி சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படுகிறது.

## குறைந்த வட்டி நிறைவான சேவை

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- அனைத்து இட்டு வைப்புகளுக்கும் DICGC மும்பை இன்சூரன்ஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- அனைத்துக் கிளைகளும் முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.53.98 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ. 46.99 கோடி

அரசுத் திட்டக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள். மகளிர் சுய உதவிக்குழுக்கடன் மற்றும் சிறு வணிகக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திரு.V.சங்கர் B.Com.
பொதுமேலாளர்

திரு. ச.தசரதன்.,B.Sc.,B.Ed.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,



187, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001.

தொலைபேசி எண் : 0452 - 2342051 முதல் 2342054 Fax : 0452 - 2345747

mdccbank@rocketmail.com, Post Box No. : 14

E-mail : mdccbank@rocketmail.com

## மக்கள் சேவையில் 112 ஆண்டுகள்

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளுடன் பொது மக்களின் பேராதரவால் ஒரு நூற்றாண்டைக் கடந்து சீரும் சிறப்புடன் செயல்பட்டு சேவை செய்து வருகின்றது

**வங்கியின் வைப்புத் தொகை : ரூ. 169131.52 இலட்சம்**

**வங்கி வழங்கியுள்ள கடன் தொகை : ரூ. 241767.32 இலட்சம்**

### வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டி விகிதம்

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு (தினசரி நிலுவைக்கு) | 3.00% |
| கால வைப்புகள் | |
| 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 3.00% |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 7.00% |
| 12 மாதங்கள் முதல் அதற்கு மேலும் | 7.50% |

60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இட்டு வைக்கும் வைப்புகளுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படுகிறது.

### தலைமை அலுவலகம் மற்றும் வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும் கடன்கள்

* தனி நபருக்கு ரூ. 30.00 இலட்சம் வரை மிகக் குறைந்த வட்டியில் நகைக்கடன்
* புதிதாக வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் வீட்டு அடமானத்தின் பேரில் அடமானக் கடன்
* தொழில் முனைவோருக்கான கடன்
* சிறு வணிகக் கடன் மற்றும் சிறு வணிக கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
* விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்கள்
* மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
* பணிபுரியும் மகளிருக்கு கடன்
* கிளைகள் மூலம் மத்திய கால முதலீட்டுக் கடன்
* மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
* MSME சிறுத் தொழில் உரிமையாளர்கள் / பங்குதாரர் நிறுவனங்கள்/ கம்பெனிகள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்குக் கடன்

இது போன்ற பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றது. மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் வாடிக்கையாளர்களுக்கு**

* குறைந்த வாடகையில் பாதுகாப்பு பெட்டக வசதி
* ATM (தானியங்கி பணம் கொடுக்கும் இயந்திரம்) வசதி
* RTGS & NEFT வசதி உள்ளது.
* அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking Service)
* விரைவில் இணையதள வங்கி சேவை (Net Banking Facility)

**செயல்பாட்டில் உள்ள வங்கியின் புதிய திட்டம்**

சிறுவர் / சிறுமியர்களுக்கான கண்மணி சேமிப்பு திட்டம்.
இத்திட்டத்திற்கு சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டியைக் காட்டிலும் கூடுதலாக 1% சேர்த்து 4% வட்டி வழங்கப்படும்.

**"இன்றைய சேமிப்பு ! நாளைய பாதுகாப்பு"**

**"கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர் வாழ்வை வளமாக்குவீர்"**

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

t கூட்டுறவே! நாட்டுயர்வு!

# சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

செரி ரோடு, சேலம் –630001, தொலைபேசி எண்: 0427–2451761–765
Email : slm_sdccbslm@yahoo.co.in & devtsdccb@gmail.com
Website : www.salemdccbank.com

**தமிழ்நாடு அரசிடம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறந்த சேவை புரிந்ததற்காக 8 முறை விருது பெற்ற வங்கி**

**அகில இந்திய அளவில் சிறந்த வங்கிக்கான விருது பெற்ற வங்கி இட்டுவைப்புகளுக்கு அதிக வட்டி விகிதம்**

**8.00%***

**ரூ.50.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் இட்டுவைப்பு தொகைக்குச் சிறப்பு வட்டி விகிதம்**

**8.25%***

**வங்கியின் மூலம் வழங்கப்பட்டு வரும் கடன்களின் விபரம்**

- நகைக்கடன்
- வீட்டு வசதிக்கடன், வீடு அடமானக் கடன்
- சம்பளக்கடன், பணிபுரியும் மகளிர் கடன்
- ஆடவர் / மகளிர் சிறுவணிகக்கடன்
- கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- மாற்றுத்திறனாளி கடன், மாற்று பாலினத்தவருக்கான வணிகக் கடன்)
- கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- நுகர்பொருள் கடன், வாகனக் கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- சுய உதவிக்குழு கடன், கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
- வீட்டு மனை (Plot) வாங்குவதற்கானக் கடன், வாங்கிய மனையில் வீடு கட்டக் கடன்
- நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைபொருட்கள் தயாரிக்கும் பணியில் உள்ளவர்களுக்கு கடன் (Folk Artist & Artisans)
- கல்விக்கடன் (Education Loan), உணவுப் பதப்படுத்தும் காரியத்திற்குக் கடன் (PMFME), MSME கடன்
- டாம்கோ கடன், டாப்செட்கோ கடன்
- கலைஞரின் கனவு இல்லம், மறு அடமானக் கடன் (மூத்தகுடிமக்கள்)
- சூரிய ஒளி ஆற்றல் மூலம் மின்உற்பத்திச் சாதனம் நிறுவக் கடன் (Solar Panel)
- RTGS, NEFT மற்றும் Mobile Banking, Gpay, Phoepee, UPI, வசதிகள்

**தங்களது தேவைகளுக்கு அருகில் உள்ள சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளை அணுகவும்**

கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்





# இன்று ஒரு தகவல்

# நிழல் மனிதர்கள்!

நிழல் மனிதர்கள்!

ஒருத்தன் வேகமா ஓடிவந்தான்.

"ஏம்ப்பா இப்படி தலைதெறிக்க ஓடிவர்றே?" –ன்னு கேட்டேன்.

"பின்னாடி துரத்திக்கிட்டு வருது சார்!" –ன்னான். ஏதாவது நாய் துரத்திக்கிட்டு வருது போல இருக்கு–ன்னு நினைச்சி அவனுக்குப் பின்னாடி பார்த்தேன். கண்ணுக்கெட்டின தூரம் வரைக்கும் எதுவுமே தெரியலே.

"எதுவும் உனனைத் –ன்னேன். துரத்தலையே...!"

"நல்லா பாருங்க சார்" –ன்னான்.

"பார்த்துத்துட்டுத் தான் சொல்றேன்" –ன்னேன்.

"இதோ பாருங்க சார் இதுதான் என்னைத் துரத்துது –ன்னான் அவன் சுட்டிக்காட்டின இடத்துலே பார்த்தேன். அங்கே அவனுடைய நிழல்தான் தெரிஞ்சிது.

"என்னப்பா சொல்றே?" –ன்னு அவனைக் கொஞ்சம் சந்தேகமா பார்த்தேன்.

அதுக்கப்புறம் அவன் விவரமா சொன்னான்.

"சார்...எனக்கு என் நிழலைக் கண்டா பிடிக்கறதில்லை... எப்பப் பார்த்தாலும் இது என்னையே பின் தொடர்ந்து வந்துக்கிட்டிருக்கு... இதை என்கிட்டேயிருந்து பிரிக்கறதுக்கு எவ்வளவோ முயற்சிகள்லாம் பண்ணிப் பார்த்துட்டேன்... முடியலே!" –ன்னான்.

"அப்படி என்னென்ன முயற்சிகள் பண்ணினே?" –ன்னு கேட்டேன். அவன் என்னென்ன செஞ்சான்ங்கறதை விவரமாச் சொன்னான். அவன் என்ன பண்ணியிருக்கான்.

ஒருபெரியகுழியைத்தோண்டிஅதுலேதன்னுடையநிழலைப்புதைச்சுடுவோம்–ன்னு முடிவு பண்ணிக்கிட்டு... மண்வெட்டியை எடுத்துக்கிட்டு தோட்டத்துப்பக்கம் போனான்.

ஆழமா ஒரு குழியைத் தோண்டினான் குனிஞ்சிபார்த்தான். அந்தக் குழிக்குள்ளே தன்னுடைய நிழல் தெரிஞ்சிது!

ஆகா... இதுதான் சமயம்... நிழல் இப்ப குழிக்குள்ளே இருக்கு... மண்ணைப்போட்டு

மூடிடலாம்...ன்னு நினைச்சிக்கிட்டு... கொஞ்சம் மண்ணை அள்ளிப்போட்டான். பார்த்தா... இப்ப நிழல் அந்த மண்ணுக்கு மேலே வந்திருக்கு!

இது ஏதுடா வம்பாப்போச்சு – ன்னு அவசர அவசரமா மண்ணை வாரிப் போட்டான். குழி பூறாவும் மூடிப்ட்டு பார்க்கறான்... மறுபடியும் நிழல் மேலே வந்து உட்கார்ந்திருக்கு!

சரி... இதை குழியிலே புதைக்க முடியாது–ன்னு முடிவு பண்ணிக்கிட்டு... இதை இங்கேயே இப்படியே விட்டுட்டு ஓடிப்போயிடுவோம்–ன்னு நினைச்சி எடுத்தான் ஓட்டம்!

அது காலை நேரம். இவன் மேற்கே நோக்கி ஓடிக்கிட்டிருக்கான். ஓடி ஓடிப் பார்க்கறான். நிழல் இவனைவிட வேகமா இவனுக்கு முன்னாடி ஓடிக்கிட்டிருக்கு!

சரி... திரும்பி ஓடிப்பார்ப்போம்–ன்னு நினைச்சிக்கிட்டு... அப்படியே சடார்ன்னு திரும்பி ஓட ஆரம்பிச்சான்.

அப்பாடா... நிழலைக்காணலே... கொஞ்ச தூரம் ஓடி ஒரு இடத்துலே நின்னு சாவகாசமா திரும்பிப் பார்க்கறான்... பின்னாடியே நிழல் துரத்துது.



இப்படி ஓடி வந்துதான் இங்கே நம்ம முன்னாடி நின்னு தன்னுடைய அவஸ்தையைச் சொல்லிக்கிட்டு இருக்கான்.

"இந்த நிழலைத் துரத்த அல்லது வெட்டிவிட ஏதாவது ஒரு வழி சொல்லுங்க சார்!" ன்னான்.

எனக்கு ஒண்ணும் புரியலே... அந்த நேரம் பார்த்து ஒரு பெரியவர் வந்தார். அவர்கிட்டே யோசனை கேட்டோம்... என்ன செய்யலாம்–ன்னு.

அவர் சொன்னார்: "நீ அங்கேயும் இங்கேயும் ஓடாதே ... அப்படியே கீழே படுத்துக்கோ!"–ன்னார்.

அது நல்ல உச்சிவேளை! அவன் அப்படியே படுத்துக்கிட்டான்.

இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்தான் நிழலைக் காணலே! அவன் இப்பத்தான் நிம்மதியா இருந்தான்.

இப்ப அந்தப் பெரியவர் சொன்னார்.

எல்லா மனிதர்களுமே இப்படித்தான் ஓடிக்கிட்டிருக்காங்க. நான் எனது அப்படிங்கற ஆணவம்தான் அவர்களைத் துரத்திக்கிட்டிருக்கு... அதை விட்டுட்டு ஓடணும்ன்னு நினைச்சாலும் அது முன்னாடி வந்து நிக்குது.

பரம்பொருளை நோக்கி ஓடும்போது இந்த ஆணவம் பின்னாடி வந்துடுது.

பரிபூரண சரணாகதிங்கற நிலையிலே அது முழுசுமா மறைஞ்சுடுது... தன்னை உணர்கிற வேளை அது... அந்த நேரம் மனிதனுக்கு விடுதலை உணர்வு ஏற்படுகிற நேரம். அப்படிப்பட்ட சுதந்தர மனிதர்களாக எல்லாரும் மாறிட்டா இந்த உலகமே இன்பமயம்!

நம்ம ஆள் ஒருத்தன் ஓடி வேகமா வந்துகிட்டிருந்தான். ஏன்டா இப்படி ஓடிவர்றே? –ன்னுகேட்டார் எதிர்லே வந்தவர்.

"ஆசை துரத்துது. அதுதான் ஓடிவர்றேன்!" னான்.

"உனக்கு என்ன ஆசை?" –ன்னு கேட்டார்.

"எனக்கு ஒண்ணும் ஆசை இல்லீங்க... என்னை எப்படியாவது பிடிச்சுடணும்ன்னு போலீஸ் காரங்களுக்கு ஆசை! அந்த ஆசை இப்ப என்னை துரத்திக்கிட்டு பின்னாடி வருது! அதுதான் தப்பிச்சி வந்து கிட்டிருக்கேன்... குறுக்கே நிற்காதீங்க... வழிவிடுங்க!" –ன்னு சொல்லிக்கிட்டே வேகமா ஓடி மறைந்தான்!❑


கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

**சி.2440 சேனூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்**

- ✦ மக்கள் சேவையில் 59 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி பாதையில் செயல்படுகிறது.
- ✦ சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.1937.36 கோடி உள்ளது.
- ✦ நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.25% வட்டியும் மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை!**

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.
- ✦ வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு.
- ✦ முழுமையான கணினி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.11.04 கோடி உள்ளது.
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.1929 கோடி உள்ளது.

**5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்ட கடன்கள் சிறு வணிகக் கடன்கள், பண்ணைசாரா கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள், மகளிர் சுயஉதவிக்குழுக் கடன் மற்றும் சிறு வணிகக் கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 8.25% கடன் அளிக்கப்படுகிறது.

திரு.G. விஸ்வநாதன்
செயலாளர்

திரு. J. ரகு
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# சி.812 குடியாத்தம் கூட்டுறவு நகர வங்கி லிட்.,

**தரணம்பேட்டை, சந்தப்பேட்டை மற்றும் பேர்ணாம்பட்டு கிளை**
**தொலைபேசி: 04171–220068, 220688, 233088**



## நிரந்தர வைப்பு மற்றும் தொடர் வைப்புகளுக்கு வட்டி விகிதம் 16.02.2025 முதல்

**7.75% வட்டி**

**மூத்த குடிமக்களுக்கு 16.02.2025 முதல் 8.25%**

| வைப்புகளுக்கான கால விவரம் | வட்டி விகிதம் |
|---|---|
| 15 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.00% |
| 1 ஆண்டு முதல் 2 ஆண்டிற்குள் | 7.50% |
| 2 ஆண்டும் அதற்கு மேலும் | 7.75% |

**தினசரி நகைக்கடன் மாலை 4.00 மணிவரை வழங்கப்படுகிறது**



# மஞ்சள்

## கூட்டுறவு இயக்கம் காக்கும் பாரம்பரியப் பயிர்!!!

மஞ்சள் தமிழ்நாட்டின் பாரம்பரிய, பொருளாதார மற்றும் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் முக்கிய பயிராகும். சமையல், மருத்துவம், ஆன்மிகம், அழகு சாதனங்கள் என பல்வேறு துறைகளில் பயன்படும் மஞ்சள், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய வேளாண்மை பொருளாகும். இத்தகைய மஞ்சள் உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்தி, விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வதில் கூட்டுறவு இயக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது.

### மஞ்சளின் தோற்றமும் வரலாறும்

மஞ்சள் இந்திய துணைக் கண்டத்தில் தோன்றிய ஒரு பழமையான பயிர் ஆகும். சங்க இலக்கியங்களிலும், சித்த மருத்துவ நூல்களிலும் மஞ்சள் குறித்து குறிப்புகள் காணப்படுகின்றன. பழங்காலம் முதலே இந்தியாவிலிருந்து மஞ்சள் உலகின் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்துள்ளது. இந்தியா இன்று உலகின் முன்னணி மஞ்சள் உற்பத்தி நாடாக திகழ்கிறது.

### மஞ்சள் சாகுபடி

மஞ்சள் ஒரு நிலத்தடி கிழங்கு வகை பயிராகும். இது வெப்பமான, ஈரப்பதம் கொண்ட காலநிலையை விரும்பும் பயிர். 20°C முதல் 35°C வரை வெப்பநிலை மற்றும் வருடத்திற்கு 100–150 செ.மீ மழைப்பொழிவு கிடைத்தால் மஞ்சள் சிறப்பாக வளரும். நன்கு வடிகாலமைப்பு கொண்ட, வளமான செம்மண் மற்றும் மணல் கலந்த கரிசல் மண் மஞ்சள் சாகுபடிக்கு மிகவும் உகந்ததாகும்.



மஞ்சள் சாகுபடி பொதுவாக மே – ஜூன் மாதங்களில் (கோடை மழை அல்லது ஆரம்ப பருவமழை காலத்தில்) தொடங்கப்படுகிறது. தரமான, நோயற்ற விதைக்கிழங்குகள் (seed rhizomes) தேர்வு செய்து, வரிசை முறையில் நடவு செய்யப்படுகிறது. விதைப்பதற்கு முன் கிழங்குகளை உயிரியல் பூஞ்சைநாசினி அல்லது சுண்ணாம்பு கலவையில் ஊறவைத்து நடுவது நோய்த்தொற்றுகளைத் தடுக்க உதவுகிறது.

நடவு செய்த பிறகு, மண்ணில் ஈரப்பதம் நிலைத்திருக்க மல்சிங் (mulching) செய்யப்படுகிறது. இது களை வளர்ச்சியைத் தடுத்து, ஈரப்பதத்தைப் பாதுகாக்க உதவுகிறது. வளர்ச்சி காலத்தில் 2 முதல் 3 முறை களை எடுப்பு மற்றும் மண் கொத்தல் செய்யப்படுகின்றது. மஞ்சளுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம்) சரியான அளவில் வழங்கப்படும்போது மகசூல் உயர்கிறது. தற்போது பல விவசாயிகள் இயற்கை மற்றும் கரிம முறைகளிலும் மஞ்சள் சாகுபடியை மேற்கொண்டு வருகிறார்கள்.

சுமார் 8 முதல் 9 மாதங்களில், இலைகள் மஞ்சள் நிறமாக மாறி உலர ஆரம்பிக்கும் போது பயிர் அறுவடைக்கு தயாராகிறது. அறுவடை செய்யப்பட்ட கிழங்குகள் சுத்தம் செய்து,வேகவைத்து,உலர்த்தி,பதப்படுத்தப்பட்டபிறகேசந்தைக்குஅனுப்பப்படுகின்றன. இந்த பதப்படுத்தல் முறையே மஞ்சளின் நிறம், மணம் மற்றும் தரத்தை நிர்ணயிக்கும் முக்கிய கட்டமாகும்.

இவ்வாறு அறிவியல் முறைகளும் பாரம்பரிய அனுபவங்களும் இணைந்த மஞ்சள் சாகுபடி, தமிழ்நாட்டின் விவசாயிகளுக்கு நிலையான வருமானத்தையும், உயர்தர உற்பத்தியையும் உறுதி செய்கிறது. இந்த உற்பத்தி சங்கிலியை பாதுகாப்பாக சந்தைக்கு கொண்டு செல்லும் பணியில், கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பாலமாக செயல்படுகின்றன.

## ஈரோடு கூட்டுறவு மஞ்சள் விற்பனை சங்கம் "விவசாயிகளின் நம்பிக்கையின் மையம்"

மஞ்சள் விவசாயிகளின் நலனைக் காக்கும் நோக்கில் செயல்படும் ஈரோடு கூட்டுறவு மஞ்சள் விற்பனை சங்கம் தமிழ்நாட்டின் வேளாண்மை கூட்டுறவுகளில் ஒரு சிறந்த மாதிரியாக விளங்குகிறது.

இந்த சங்கத்தின் மூலம்:

- விவசாயிகள் தங்கள் மஞ்சளை நேரடியாக கொண்டு வந்து ஏலத்தில் விற்பனை செய்ய முடிகிறது



- இடைதரகர்கள் இன்றி நியாயமான விலை விவசாயிகளுக்கு கிடைக்கிறது
- தரம் அடிப்படையில் (Quality–based grading) ஏலம் நடைமுறைப் படுத்தப்படுகிறது
- வெளிப்படையான விலை நிர்ணய முறை பின்பற்றப்படுகிறது
- வெளிமாநில மற்றும் ஏற்றுமதி வர்த்தகர்கள் ஏலத்தில் பங்கேற்கின்றனர்
- விவசாயிகளுக்கு உடனடி மற்றும் பாதுகாப்பான கட்டணம் வழங்கப்படுகிறது

இதன் மூலம் மஞ்சள் விற்பனை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட, நியாயமான, நம்பகமான அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது. ஈரோடு மஞ்சள் ஏலம், கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிப் பயணத்தை எடுத்துக்காட்டும் ஒரு முக்கிய சாதனையாகும்.



## மஞ்சளின் ஆரோக்கிய மற்றும் தொழில்துறை முக்கியத்துவம்

மஞ்சளில் உள்ள குர்குமின் (Curcumin) என்ற இயற்கைச் சேர்மம், மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து மதிப்பை உயர்த்துகிறது. மஞ்சள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும், அழற்சியை குறைக்கும், காயங்களை விரைவில் ஆற்றும் தன்மை கொண்டதாகும்.

இன்று மஞ்சள், மருந்து தொழில்கள், உணவு பதப்படுத்தல் தொழில், அழகு சாதன உற்பத்தி, மூலிகை சார்ந்த தயாரிப்புகள், ஏற்றுமதி வர்த்தகம் என பல்வேறு துறைகளில் முக்கிய மூலப்பொருளாக பயன்படுகிறது.

மஞ்சள் தமிழ்நாட்டின் பாரம்பரியப் பயிர் மட்டுமல்ல; அது விவசாயி – சந்தை – நுகர்வோர் என்ற மூன்றையும் இணைக்கும் ஒரு பொருளாதார சங்கிலி. அந்த சங்கிலியை உறுதியாக்கும் பணியில் கூட்டுறவு இயக்கமும், ஈரோடு கூட்டுறவு மஞ்சள் விற்பனை சங்கமும் முன்னணி பங்கு வகிக்கின்றன.

விவசாயிகளின் நலன், சந்தை நிலைத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயமான விலை ஆகியவற்றை உறுதி செய்யும் கூட்டுறவு அமைப்புகள், தமிழ்நாட்டின் வேளாண்மை வளர்ச்சியின் தூண்களாக விளங்குகின்றன.



## மஞ்சளின் பயன்கள் மற்றும் வீட்டு உபயோகங்கள்

மஞ்சள் தமிழர் வாழ்வியலோடு இரண்டறக் கலந்து நிற்கும் ஒரு இயற்கை அரிசியல் (natural antiseptic) ஆகும். சமையலறையிலிருந்து மருத்துவம், அழகு பராமரிப்பு, ஆன்மிகம் வரை மஞ்சள் இல்லாத இடமே இல்லை.

<u>வீட்டு உபயோகங்களில் மஞ்சளின் பங்கு:</u>

- சமையலில் – மஞ்சள் உணவிற்கு நிறம், மணம், சுவை அளிப்பதோடு, உணவை நீண்ட நேரம் பாதுகாக்க உதவுகிறது. செரிமானத்தை மேம்படுத்தி, உடல்நலத்திற்கு ஏற்றதாகும்.
- மருத்துவ பயன்பாடுகள் – சிறு காயங்கள், வெட்டுகள், சிராய்ப்புகள் ஆகியவற்றிற்கு மஞ்சள் பொடி பூசுவது தொற்றுகளைத் தடுக்கும் பாரம்பரிய முறையாகும். சளி, இருமல், தொண்டை வலி போன்றவற்றிற்கு பால்–மஞ்சள் (Golden Milk) குடிப்பது இன்றும் வழக்கில் உள்ளது.
- அழகு பராமரிப்பு – மஞ்சள் முகப்பூச்சு (face pack) சருமத்தை சுத்தமாகவும் பிரகாசமாகவும் வைத்திருக்க உதவுகிறது. முகப்பருக்கள், கரும்புள்ளிகள் குறைய மஞ்சள் பயன்படுகிறது.



- ஆன்மிக மற்றும் சடங்கு பயன்பாடு – திருமணம், பூஜை, விழாக்கள், சுபநிகழ்ச்சிகளில் மஞ்சள் முக்கிய இடம் பெறுகிறது. இது சுபம், தூய்மை, ஆரோக்கியம் என்பவற்றின் அடையாளமாக கருதப்படுகிறது.

- வீட்டு சுகாதாரம் – மஞ்சள் கலந்த நீர் தரை சுத்தம் செய்ய பயன்படுத்தப்பட்டால் கிருமி நாசினி போல் செயல்படுகிறது.

இவ்வாறு, மஞ்சள் ஒரு வேளாண் பயிர் மட்டுமல்ல; தமிழர் வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளோடு இணைந்த ஒரு இயற்கை மருந்தாகவும், பண்பாட்டு அடையாளமாகவும் விளங்குகிறது. அதனால் தான், மஞ்சள் சாகுபடியை பாதுகாக்கும் கூட்டுறவு இயக்கம், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மட்டுமல்ல, நமது பாரம்பரியத்தையும் காக்கும் ஒரு சமூக இயக்கமாக திகழ்கிறது.❑

தரவுகள் & படங்கள்: இணையத்திலிருந்து பெறப்பட்டவை

கூட்டுறவு இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்புவோர் அஞ்சல் / மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். வெளியிடப்படாத எழுத்தோவியங்களைத் திரும்ப அனுப்ப இயலாது.
கூட்டுறவு இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் துணுக்குகளில் தெரிவிக்கப்படும் கருத்துகள் எழுதுபவரின் கருத்தாகும்.
– ஆசிரியர்

Printed at Central Cooperative Printing Works Limited, 83/95 Anna Salai, Chennai - 600 002 and Published by Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai - 600 010. Editor: Dr.K.C.Ravichandran, Additional Registrar / Managing Director, Tamilnadu Coop. Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600 010.




| | | |
|---|---|---|
| திருச்செங்கோடு | பருத்தி, எள், நிலக்கடலை | செவ்வாய் |
| | தேங்காய் பருப்பு | வெள்ளி |
| | மஞ்சள் | சனி |
| கொங்கணாபுரம் | பருத்தி, எள் | சனி |
| | நிலக்கடலை | ஞாயிறு, திங்கள், புதன் |
| மல்லசமுத்திரம் | பருத்தி | புதன் |
| | நிலக்கடலை, மக்காச்சோளம் | திங்கள், வெள்ளி |
| | தேங்காய் பருப்பு | வெள்ளி |
| ஜலகண்டாபுரம் | தேங்காய் பருப்பு | செவ்வாய் |

Date of Publication : First week of Every Month
Registered Newspaper in India No.1103/57

